இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 28-01-2025

# ஆளுநர் விளக்கம் தர வேண்டும்!

குடியரசு தினத்தன்று குழப்பம் ஏற்படுத்தும் வகையில் குதர்க்க அறிக்கை வெளியிடும் ஆளுநர் ரவி, தன்னைப் பற்றி ஊடகங்கள் எழுதி வரும் செய்திக்கு இதுவரை விளக்கம் அளித்தாரா என்றால் இல்லை. அச்செய்தியில் அவரது கண்ணுக்கு இன்னும் தெரியவில்லையா?

19.1.2025 தேதியிட்ட 'ஜூனியர் விகடன்' இதழில், 'கவர்னரின் திருவிளையாடல்' என்ற தலைப்பில் (பக்கம் 3) வெளியாகி இருக்கும் செய்திக்கு ஆளுநர் ரவி முதலில் விளக்கம் அளிக்க வேண்டும். அந்த செய்தி இதுதான்...

**"எடப்பாடிக்கு நெருக்கமானவரின் கல்லூரியில் உற்சாகமாக விழா கொண்டாடியிருக்கிறாரே ஆளுநர்...கவனித்தீரா?"**

"அங்கிருந்துதானே வருகிறேன்... திருச்சி மாவட்டத்தில் இருக்கும் 'முசிறி இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி' என்ற கல்வி நிறுவனம், எடப்பாடியின் வலது கரமான சேலம் புறநகர் அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர் இளங்கோவனுடையது. இவர்மீதும் இவருடைய மகன் பிரவீன்மீதும் சொத்துக்குவிப்பு வழக்கு, கூட்டுறவு வங்கி முறைகேடு என ஏகப்பட்ட வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. சமீபத்தில்தான் வரி ஏய்ப்பு புகார் காரணமாக அந்தக் கல்லூரியில் ரெய்டு நடத்தி, முக்கிய ஆவணங்கள் அடங்கிய இரண்டு அறைகளை சீல் வைத்திருக்கிறது ஐ.டி. இவ்வளவு சிக்கலான சூழலில்தான், அந்தக் கல்லூரியில் பொங்கல் விழாவைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாடி மகிழ்ந்திருக்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி"

**"ஆளுநர் பங்கேற்கிறார் என்றால் நிகழ்ச்சி நடக்கும் கல்லூரி நிர்வாகம் குறித்து பலகட்ட விசாரணைகள் நடந்திருக்குமே?"**

"அதில்தான் சர்ச்சைகள் வெடிக்கின்றன. 'ஒரு விழாவில் ஆளுநர் கலந்து கொள்கிறார் என்றால் நிகழ்ச்சியை நடத்துபவர்கள் குறித்து அலசி ஆராயப் படும். அப்படியிருக்கும்போது, ஐ.டி.ரேடாரிலுள்ள முக்கியப் புள்ளியான சேலம் இளங்கோவன் கல்லூரிக்கு எப்படிப் போனார் கவர்னர்?' என்று கேள்வி எழுந்திருக்கிறது. இந்தக் கேள்விக்கு இரண்டு விதமான பதில்களைச் சொல்கிறார்கள். அதாவது, அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்க எல்லா வழிகளையும் பயன்படுத்திவருகிறது டெல்லி. அந்த வகையில், 'இளங்கோவனைப் பகடையாகப் பயன்படுத்தி, அவரது ரூட்டிலும் முயற்சி நடக்கிறது' என்கிறார்கள் ஒரு தரப்பினர். அதேநேரம், இளங்கோவனின் சர்ச்சைக்குரிய பின்னணி, ஆளுநருக்குத் தெரிந்திருந்தால், நிகழ்ச்சியில் நிச்சயம் பங்கேற்கச் சம்மதித்திருக்க மாட்டார்' என்கிறார்கள் அவருக்கு நெருக்கமானவர்கள். அதாவது, இளங்கோவன் குறித்த தகவல்களை மறைத்து 'இயற்கை விவசாயிகளோடு பொங்கல் நிகழ்ச்சி என்று ஆளுநரையும், அவருடைய இல்லத் தரப்பையும் பவன் புள்ளிகள் அழைத்துச் சென்றுவிட்டார்கள்' என்றும் சொல்கிறார்கள். இது ஆளுநரின் திருவிளையாடலா அல்லது அவரை வைத்து விளையாடிவிட்டார்களா... என்று பட்டிமன்றம் நடக்கிறது பவன் வட்டாரத்தில்."

**"எது எப்படியோ... ஆளுநரின் விசிட்டால் இளங்கோவன் தலைக்குக் கொஞ்ச நாளைக்கு ஆபத்து இருக்காது" - என்கிறது 'ஜூனியர் விகடன்'. ஆளுநர் பெருந்தகை இதற்கு விளக்கம் அளித்திருக்க வேண்டாமா?**

ஜனவரி 22-24 தேதியிட்ட 'நக்கீரன்' இதழில் 'கவர்னருடன் அ.தி.மு.க. பேரம்' என்ற தலைப்பில் (பக்கம் 15-16) செய்திக்கட்டுரை தீட்டப்பட்டுள்ளது. அந்தச் செய்தி இதுதான்...

"ஜனவரி 11ஆம் தேதி முசிறியிலுள்ள இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜியில் இயற்கை விவசாயம் சார்ந்த விஷயங்கள் குறித்துப் பேசுவதற்காக ஆளுநர் சென்றுள்ளார். அதை முடித்துவிட்டு மற்றொரு என்.ஜி.ஓ. நிகழ்ச்சிக்கும் சென்றுள்ளார்.

முசிறியிலுள்ள இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி கல்லூரியின் உரிமையாளர், எடப்பாடியின் நெருங்கிய நண்பரான அ.தி.மு.க. இளங்கோவன். இவர் ஏற்கெனவே கூட்டுறவு சங்க சேர்மனாகவும் இருந்துள்ளார். அப்போதுதான் மோடி ஆட்சியில் 500 ரூபாய், 1000 ரூபாய் நோட்டுக்கள் செல்லாதென அறிவிக்கப்பட்டன. அந்த நேரத்தில், செல்லாத ரூபாய் நோட்டுக்களை சேலம் கூட்டுறவு சங்கத்தில் மாற்றிக்கொடுத்த விவகாரத்தில் சி.பி.ஐ. விசாரணையில் சிக்கினார். 2012-22 வரை எடப்பாடி வகித்து வந்த கட்சிப் பதவி இளங்கோவனுக்கு கொடுக்கப்பட்டது. அந்தளவிற்கு எடப்பாடிக்கு விசுவாசியாகவும், பினாமியாகவும் செயல்படுபவர்தான் இந்த இளங்கோவன். சென்ற வாரம்கூட இளங்கோவனின் சம்பந்தி மற்றும் அவர் தொடர்பான இடங்களில் ஈ.டி. சோதனை நடந்துள்ளது. இப்படிப்பட்ட சம்பவங்களுக்கு பிறகு தான் முசிறிக்கு ஆளுநர் சென்றுள்ளார்.

ஒரு மாநிலத்தின் ஆளுநர், ஈ.டி. விசாரணைக்குள்ளான ஒருவரின் கல்லூரிக்கு அடுத்த நாளே சிறப்பு அழைப்பாளராகப் போகிறார் என்றால் எந்தளவிற்கு அ.தி.மு.க.வுக்கும் ஆளுநருக்கும் மறைமுகக் கூட்டணி இருக்கிறது என்பதை வெட்டவெளிச்சமாகக் காட்டுகிறது.

மேலும் இந்த விவகாரத்தால் ஆளுநர் பதவிக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதோடு, அவருடைய நேர்மையிலும் சந்தேகம் எழுகின்றது. இந்தக் கல்லூரி விழாவில் ஆளுநர் கலந்துகொண்ட விஷயம் கேள்விப்பட்டதுமே ஒன்றிய உள்துறை அமைச்சகத்திலிருந்து அதுகுறித்து விசாரணை செய்துள்ளார்களாம். அதேவேளை நிர்மலா சீதாராமனும் இதுகுறித்து விசாரித்துள்ளாராம்.

எடப்பாடியின் பினாமியாக இருந்துவரும் இளங்கோவனின் கல்லூரி நிகழ்ச்சிக்குச் சென்றது வெறுமனே பொங்கல் விழாவாக இல்லாமல், அவர்கள்மீது நடத்தப்படும் ஈ.டி. விசாரணையை நிறுத்துவதற்கு ஆளுநர் மூலம் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகவும்தான் என்ற தகவல் கசிந்துள்ளது..."

- என்று எழுதி இருக்கிறது 'நக்கீரன்' இதழ்.

வருமானவரி, அமலாக்கத்துறை விசாரணை வளையத்தில் சிக்கி இருப்பவரின் அழைப்பை ஏற்றுக் கொண்டு ஆளுநர் சென்றதன் பின்னணி என்ன? மர்மம் என்ன?

**பொய்களையும் புனைவுகளையும் தினந்தோறும் அறிக்கையாக, பேச்சுகளாக உதிர்த்துவரும் ஆளுநர், தன் மீது தமிழ்நாட்டு ஊடகங்கள் எழுதும் செய்திகளுக்குப் பொதுவெளியில் முதலில் விளக்கம் அளித்திருக்க வேண்டாமா?**

●●

---

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம், நாளை (29-1-2025 - புதன்கிழமை) காலை 11.00 மணிக்கு, சென்னை, அண்ணா அறிவாலயம், 'முரசொலி மாறன் வளாகத்தில்' உள்ள கூட்ட அரங்கில் நடைபெறும்.

அதுபோது, கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் : ஒன்றிய அரசின் 2025-26-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 27.1.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

## வக்ஃபு வாரிய விவகாரம்: எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பை மீறி கூட்டம்!

# நாடாளுமன்றக் கூட்டுக் குழு கேலிக்கூத்தாக மாறிவிட்டது!

## மக்களவை கழகக் கொறடா ஆ.இராசா கடும் கண்டனம்!

புதுடெல்லி, ஜன. 28 -

எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பையும் மீறி இன்று வக்பு மசோதாவை இறுதி செய்ய நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் தலைவர் முயற்சி செய்வதாக ஆ.ராசா எம்.பி. குற்றம்சாட்டி உள்ளார்.

இது குறித்து பேட்டி அளித்த அவர்,

நாடாளுமன்றகூட்டுக்குழுவை ஒன்றிய அரசு தவறாக பயன்படுத்துவதாக குற்றம் சாட்டினார்.



சில நாட்களுக்கு முன்பு நாங்கள் எதிர்ப்பு தெரிவித்த போதிலும், ஜே.பி.சி. தலைவர் மிகவும் பிடிவாதமாக இருக்கிறார் எங்களின் எதிர்ப்பையும் மீறி திருத்தங்கள் மீதான ஆய்வுக் கூட்டம் நடத்தப் படுகிறது

ஜே.பி.சி.யில் என்ன செய்ய வேண்டும் என்பதை அவர்கள் முடிவு செய்துவிட்டனர்,

அதனை அவர்கள் நிறைவேற்றுவார்கள்என நான் கருதுகிறேன் ஜே.பி.சி. வெறும் கண்துடைப்பு நடவடிக்கையாக பயன்படுத்தப்படுகிறது, அது ஒரு கேலிக்கூத்தாக மாறிவிட்டது.

அனைத்து எதிர்க்கட்சி எம்.பி.க்களும் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து விவாதிப்பார்கள் என்றார்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய ஆ.ராசா, பா.ஜ.க. எம்.பி. ஜெகதாம்பிகா பால் சர்வாதிகார போக்குடன் செயல்படுவதாக குற்றம் சாட்டினார்.

நாடாளுமன்றகூட்டுக்குழுவை ஒன்றிய பா.ஜ.க. அரசு தவறாக பயன்படுத்துவதாகவும் டெல்லி பேரவை தேர்தலை மனதில் வைத்து வக்ஃபு வாரிய விவகாரத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு செயல்படுவதாகவும் புகார் கூறினார்.

---

# சர்வாதிகார பா.ஜ.க. ஆட்சியில் அரசமைப்புச் சட்ட கோட்பாடுகள் சிதைப்பு!

## காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடும் விமர்சனம்!

புதுடெல்லி, ஜன. 28: சர்வாதிகார பா.ஜ.க. ஆட்சியில் அரசமைப்புச் சட்டத்தின் புனிதமான ஒவ்வொரு கோட்பாடும் சிதைக்கப்படுகிறது என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடுமையாக விமர்சித்தார்.

மேலும், 'மத அடிப்படைவாதத்தில் மூழ்கிய பா.ஜ.க., கடந்த 10 ஆண்டுகளாக சமூகத்தை பிளவுபடுத்தும் கொள்கையை நடைமுறைப்படுத்துகிறது' என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

குடியரசு தினத்தையொட்டி, நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்து வெளியிட்ட அறிக்கையில் கார்கே இந்த விமர்சனத்தை முன் வைத்துள்ளார். அவர் மேலும் கூறியிருப்பதாவது:

இந்தியாவின் ஆன்மாவாக விளங்கும் அரசமைப்புச் சட்டம் அமலாக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இந்த தருணத்தில் மகாத்மா காந்தி, பண்டித ஜவஹர்லால் நேரு, சர்தார் படேல், பி.ஆர்.அம்பேத்கர், நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், ராஜேந்திர பிரசாத் போன்ற மகத்தான தலைவர்களுக்கு தலைவணங்குகிறோம்.

அரசமைப்புச் சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய லட்சியங்களை மக்கள் பாதுகாக்க வேண்டிய நேரமிது. அரசமைப்புச் சட்டத்தை பாது காக்க அனைத்து தியாகங்களுக்கும் நாம் தயாராக வேண்டும். பல்லாண்டுகளாக கவனமாக கட்டமைக்கப்பட்ட நிர்வாக அமைப்புகள் இப்போது தொடர் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன. தன்னாட்சி அமைப்புகளில் அரசியல் தலையீடு, புதிய விதியாக



மாறியுள்ளது.

**மக்களின் சேமிப்பு அழிந்துவிட்டது!**

கூட்டாட்சிமுறை தினசரி அடிப்படையில் நசுக்கப்பட்டு, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. ஆட்சியாளர்களின் சர்வாதிகார போக்கால், நாடாளுமன்ற செயல்பாடுகள் பின்னடைவைச் சந்தித்துள்ளன.

பெரும்பாலான ஊடகங்கள் அரசின் பிரசார கருவியாக மாற்றப்பட்டுள்ளன. எதிர்க்கட்சித் தலைவர்களின் குரலை ஒடுக்குவதே ஆட்சியாளர்களின் ஒரே கொள்கையாக மாறியுள்ளது. பட்டியல் இனத்தவர், பழங் குடியினர், இதர பிற்படுத்தப் பட்டோர், ஏழைகள், சிறுபான்மையினர் ஆகியோர் நாட்டின் இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்படுகின்றனர். அவர்கள் மீது அராஜகம் கட்ட விழ்க்கப் படுகிறது. பொருளாதார ஏற்றத்தாழ்வு விரிவடைந்துள்ளது.

ஏழைகள், நடுத்தர மக்கள் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் ஒவ் வொரு பைசாவும் வரி விதிப்பின் மூலம் விழுங்கப்படுகின்றன. அரசின் தவறான பொருளாதார கொள்கைகளால் மக்களின் சேமிப்பு அழிந்து விட்டது.

மத்திய அரசின் தோல்விகள் சுட்டிக் காட்டப்படும் போது, திசைதிருப்பும் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். பெரும்பாலும் கடந்த காலத்தை நினைவூட்டும் அவர்கள், நிகழ் காலம் குறித்து வாய்திறப்பதில்லை.

'வேற்றுமையில் ஒற்றுமை' என்பதில் நம்பிக்கை கொண்ட 140 கோடி மக்களிடம் 'ஒரே நாடு, ஒரே கட்சி' என்ற கொள்கையை திணிக்கும் போக்கு நிலவுகிறது என்று கார்கே தெரிவித்துள்ளார்.

**பா.ஜ.க. தலைவர்கள் 'நரகவாசிகள்':**

கர்நாடக மாநிலம், பெங்களூரில் உள்ள மாநில காங்கிரஸ் தலைமையகத்தில் தேசியக் கொடி ஏற்றி வைத்து உரையாற்றிய கார்கே, 'நாட்டின் சுதந்திரத்துக்காகவோ, சமூக மேம்பாட்டுக்காகவோ பா.ஜ.க. தலைவர்கள் எதுவும் செய்யவில்லை. அவர்கள் நரகவாசிகள்' என்று விமர்சித்தார்.

---

## 2026 சட்டமன்றத் தேர்தலிலும்

# கழகமே வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைக்கும்!

## ஒட்டன்சத்திரம் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு!

திண்டுக்கல், ஜன. 28 - திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழக மாணவரணி சார்பில் மொழிப் போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது.

நகரச் செயலாளர் வெள்ளைச்சாமி வரவேற்புரையாற்றினார்.

அமைச்சர் அர.சக்கரபாணி, தமிழ் மொழிக்காக போராடி இன்னுயிர் நீத்த மொழிப்போர்த் தியாகிகளின் படங்களுக்கு, மலர்தூவி மரியாதை செலுத்தினார். பினனர் அவர் பேசியதாவது: -

தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து பெற்று தந்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். கன்னியாகுமரியில் திருவள்ளுவருக்கு சிலை அமைத்துக் கொடுத்தவரும் கலைஞரே, திருவள்ளுவருக்கு பெருமைச் சேர்க்கும் வகையில் முதலமைச்சர் கண்ணாடி பாலம் அமைத்துள்ளார். தேர்தல் வாக்குறுதிகளில் 389 வாக்குறுதிகள்



நிறைவேற்றப்பட்டுள்ளன வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலிலும் கழகத்தின் கூட்டணி மகத்தான வெற்றி பெறும் என்று பேசினார்.

நிகழ்வில் வேடசந்தூர் எம்.எல்.ஏ. காந்திராஜன், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் தூத்துக்குடி சரத் பாலா, ஆம்பூர் தர்மன், ஒட்டன்சத்திரம் தொகுதி மேற்பார்வையாளர் பரணி மணி, மாவட்ட அவைத் தலைவர் மோகன், மாவட்ட துணைச் செயலாளர்கள் இராஜாமணி, தமிழ்ச் செல்வி, ஒன்றியச் செயலாளர்கள் ஜோதீஸ்வரன், தர்மராஜ், பொன்ராஜ், பாலு சுப்பிரமணியன், கவிதா பார்த்திபன், சாமிநாதன், சீனிவாசன் சுப்பையா, பேரூராட்சித் தலைவர்கள் ஷேக் சிக்கந்தர் பாட்சா, கருப்புசாமி, துணைத் தலைவர் ஹாஜி அப்துல் சுக்கூர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கண்ணன், முன்னாள் மாவட்டக் கவுன்சிலர் கிருஷ்ணசாமி, முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் தங்கம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பாண்டியராஜன், ஆனந்தராஜ், ஒன்றிய இளைஞரணி அமைப்பா ளர்கள் அசோக் வேலுச்சாமி, முருகானந்தம், தண்டபாணி மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் சுரேஷ் குமார், சரண்யா, சிவா, செல்வகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முடிவில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தினேஷ் முத்துகிருஷ்ணன் நன்றி கூறினார்.




வக்ஃப் திருத்த மசோதா மீதான நாடாளுமன்றக் கூட்டுக் குழுக் கூட்டம் புதுடெல்லியில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் நாடாளுமன்ற – மக்களவை கழகக் கொறடா ஆ.இராசா, எம்.எம்.அப்துல்லா எம்.பி. ஆகியோர் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கினர்.